# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

## OS.No. 551/2023

| | | | |
|---|---|---|---|
| Name | : | திரு. முருகேசன் | **Pw2** |
| Father's Name | : | | |
| Village | : | | |
| Taluk | : | | |
| Caste | : | | |
| Calling | : | | |
| Religion | : | | |
| Age | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 11th day of November 2025.

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் வாதி தரப்பு சாட்சி ஆவேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொன்னவை தான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ- 3 கிரைய ஒப்பந்த ஆவணத்தில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த **கையொப்பம் வா.சா.ஆ.16** ஆகும். 2 வருடங்களுக்கு முன்பு, மாங்கனி என்பவரிடமிருந்து, சண்முகவேல் என்பவருக்கு வாட்டர் பிளாண்ட் உள்ள இடத்தை கிரையம் பேசி பல்வேறு தேதிகளில் 38 லட்ச ரூபாய் வாங்கி கொடுத்தேன். அதற்காக 3 கிரைய ஒப்பந்தங்கள் போடப்பட்டன.

அவற்றிலும் நான் சாட்சி கையொப்பமிட்டேன். வா.சா.ஆ- 4 ஆவணத்தில் பிரதிவாதியின் கணவர் ஜெயக்குமார் என்பவரும் என்னுடன் சாட்சியாக கையொப்பமிட்டுள்ளார். வா.சா.ஆ. 6 கிரைய ஒப்பந்த ஆவணத்திலும் நானும் பிரதிவாதியின் கணவர் ஜெயக்குமார் என்பவரும் என்னுடன் சாட்சியாக கையொப்பமிட்டோம். அந்த ஆவணத்தில் என்னென்ன தேதிகளில் மாங்கனி சண்முகவேலிடம் பணம் பெற்றார் என்ற விவரங்கள் அந்த ஆவணத்தின் பின்பக்கம் மேற்குறிப்பாக எழுதப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தில் நான் ஒரு சாட்சியாக கையொப்பமிட்டுள்ளேன். தொகை பெற்றுக்கொண்டதாக பிரதிவாதியும் அவரது கணவரும் கையொப்பமிட்டுள்ளார்கள்.

வா.சா.ஆ- 7 கிரைய ஆவணத்தில், பிரதிவாதி வாதிக்கு கிரையம் கொடுத்த ஆவணத்தில் நானும் பிரதிவாதியின் கணவர் ஜெயக்குமாரும் சாட்சிகளாக கையொப்பமிட்டுள்ளோம். மேற்படி வாட்டர்பிளாண்ட் அமைந்துள்ள இடத்தின் ஒரு பகுதி கிரையம் முடிக்கப்பட்டுவிட்டது. மற்றொரு பகுதியை பொறுத்துதான் கிரைய ஒப்பந்த ஆவணம் ஏற்படுத்தப்பட்டது. கிரைய ஒப்பந்த ஆவணம் ஏற்படுத்திக்கொடுத்துவிட்டு தற்போது 3ம் தரப்பினருக்கு பிரதிவாதி மேற்படி இடத்தை விலை பேசி வந்தார். எனவே வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதி வேறு யாரும் அந்த இடத்தை கிரையம் கொடுக்கக்கூடாது என வாதி தரப்பில் சார்பதிவாளர் அலுவலகத்தில் கொடுக்கப்பட்ட தடங்கல் மனு வா.சா.ஆ.11தான்.

**குறுக்குவிசாரணை இன்று இல்லை.**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi